பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
நெ.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை –28.

சுற்றறிக்கை எண்.03/2022
க.எண்.8413/ஐ2/2013 நாள்.27.05.2022.

பொருள்: சங்கங்கள் – தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975– படிவம்–VI, VII, மற்றும் ஆண்டறிக்கைகள் கோர்வை செய்தல் குறித்து மாவட்டப்பதிவாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றறிக்கை அனுப்புதல் – குறித்து.

பார்வை:
1. உச்சநீதிமன்ற வழக்கு Civil Appeal No.(s).5989–5991 of 2009, தீர்ப்பாணை நாள்.20.3.2012 (S.David Stephen & others vs C.M.S. Evangelical Suvi David Memorial Higher Secondary School Committee)
2. சென்னை உயர்நீதின்றம் மதுரை(கிளை)யின் தீர்ப்பாணை எண்.W.A.(MD)No.515/2008, M.P.No.1/2008 நாள்:31.10.2008, (பத்தி 15).
3. பதிவுத்துறைத்தலைவர் அலுவலக சுற்றறிக்கை எண்.7/2011 (கோப்பு எண்.34579/ஐ1/2011) நாள்.27.7.2011

.....

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 மற்றும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகள் 1978ன் கீழ் படிவம்–VII கோர்வைக்கு ஏற்பது குறித்த வழிகாட்டுதல்கள் பார்வை (3)–ல் காணும் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ், பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வரும் சங்கங்களின் படிவம்–VII கோர்வை செய்வது தொடர்பாக, சங்கப் பதிவாளர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றாமலும், உரிய ஆவணங்களை முறையாக ஆய்வு

Verified PedEstate ™

செய்யாமலும் கோர்வைக்கு ஏற்பதால், பல்வேறு புகார்கள் பதிவுத்துறைத்தலைவர் அவர்களுக்கு, தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

2. எனவே, சங்க ஆண்டறிக்கைகள் மற்றும் நிர்வாகக்குழு / உறுப்பினர்கள் மாற்றம் தொடர்புடைய படிவம் VII ஆகியவற்றினை கோர்வைக்கு ஏற்கும் நிகழ்வில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

A. <u>படிவம்–VII கோர்வை தொடர்பாக</u>

நிர்வாகக்குழு மாற்றம் மற்றும் உறுப்பினர் சேர்க்கை/நீக்கம் தொடர்புடைய படிவம் VII, கோர்வைக்கு தாக்கல் செய்யப்படும் நிகழ்வில்,

i. நிர்வாகக்குழு மாற்றம் தொடர்புடைய படிவம் VIIல் இடம்பெற்றுள்ளவர்கள் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களா என்பதற்கான உண்மைத் தன்மையை அறிய முந்தைய ஆண்டில் கோர்வை செய்யப்பட்ட படிவம் VI உடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட வேண்டும்.
ii. சங்க துணைவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான விதிகள் அதாவது, கூட்டத்திற்கான குறைவெண்(Quorum), உறுப்பினர்களின் வாக்களிக்கும் தகுதி (Members entitled to vote), மற்றும் இதர தேர்தல் தொடர்பான ஷரத்துக்கள் ஆகியவை பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது சரிபார்க்கப்பட வேண்டும்.
iii. தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் பிரிவு 15 ன் படியான நிர்வாகக் குழு தேர்வு குறித்து சட்ட தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.
iv. மேலும், சங்கப்பதிவாளர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகள், 1978–ன் விதி 50ன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பதிவுருக்கள் குறைபாடுகள் ஏதுமின்றி இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.
v. புதிய உறுப்பினர் சேர்க்கை அல்லது உறுப்பினர் நீக்கம் தொடர்பான படிவம் VII கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்டால், சங்கத்தின் துணைவிதிகளின் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பது சரிபார்க்கப்பட வேண்டும்.

Verified RealEstate ™

மேற்காணும் வழிமுறைகளை பின்பற்றி, சங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள கோர்வைகள் முறையாக உள்ளது என சங்கப்பதிவாளர் மன நிறைவு அடைந்தால் படிவம் VII ஐ கோர்வைக்கு ஏற்று ஆணைப்பிறப்பிக்க வேண்டும்; இல்லையெனில், படிவம் VII–ஐ கோர்வைக்கு ஏற்காமல் குறைபாடுகளை சட்டப்பிரிவு/விதிகளுடன் சுட்டிக்காட்டி, செயல்முறை ஆணை மூலம் சங்கத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டும்.

B. <u>இரு வேறு போட்டிக்குழுக்களால் படிவம் VII கோர்வைக்கு தாக்கல் செய்யப்படும் நிகழ்வில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்:</u>

I. *சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண். W.A.1333 of 2007 நாள். 20.12.2007 (R. Muralidaran and 6 others Vs District Registrar, South Madras and another) என்ற வழக்கின் தீர்ப்புரையில் பத்தி 30ல் மற்றும் 33–ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

Para 30. It is seen from the language in which Section 15 of the Act and Rule 17 of the Rules is couched that there is a statutory obligation cast upon the society to file form No.VII within the time limit prescribed thereto. The Act or rules do not envisage any corresponding statutory duty or responsibility on the part of the Registrar of Societies while accepting Form V or Form VII filed under the Act. Therefore, it appears that what the Registrar does while accepting the forms, is only a ministerial act of receiving the form, scrutinising the same to the extent necessary to verify the correctness of the particulars contained therein and registering the same. In other words, the Registrar does no more job than that of the Registrar of Companies accepting Form No.32 or Form No.34 under the Companies Act, 1956.

Para 33. In any event, the filing of Form No.VII is only a consequential action to an election purportedly conducted. The acceptance of such a Form by the Registrar would neither affix a seal of approval on the validity of the election nor would the rejection of Form VII by the Registrar, invalidate an election properly conducted. Therefore, a person, who is aggrieved by an

Verified by RealEstate™

election, should only go before a Civil Court challenging the acceptance or rejection of Form No. VII by the Registrar as a short cut to invalidate an election....."

II. சென்னை உயர்நீதிமன்ற மதுரை(கிளை)யின் தீர்ப்பாணை எண்.W.A(MD)No.515/2008, M.P.No.1/2008; நாள்:31.10.2008ல் பத்தி 36ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Para 36. In view of the foregoing analysis of all the relevant provisions and the ratio of the Full Bench decision, our conclusions are as follows :–

i. *The ratio of the Full Bench decision is only to the effect that the Registrar does not have any power either under Section 34 or 36 of the Tamil Nadu Societies Registration Act, 1975, to cancel the election to the committee, and, or to direct holding of fresh election.*

ii. ***If the Registrar of the Societies is not satisfied about the correctness of the Form VII, he need not take such Form VII on file, but he can direct the parties to approach the Civil Court to establish the validity of the election.***

iii. *When any notice in Form VII is received by the Registrar, he is required to find out whether such notice has emanated from the appropriate authority. Obviously, he is also required to find out whether the persons claiming to be the members are in fact the members of the society. Since the register maintained in the office of the Registrar is supposed to contain the names of such members, it is not difficult for the Registrar to find out as to who are the members of the society.*

iv. *Section 36 of the Act contemplates that, if necessary, the Registrar can call upon the persons likely to have information, knowledge in the matter for enquiry and for recording of statements on oath.*

v. *Such conclusion by the Registrar is only for the purpose of maintenance of correct records, but any such order regarding membership of the society or election to the committee for the purpose of maintenance of records is obviously subject to the*

Verified RealEstate™

decision of the Civil Court, whether final or interlocutory order. However, till any contrary order is passed by the Civil Court, either finally or even by interlocutory order, the authorities under the Tamil Nadu Societies Registration Act, 1975 or under the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973, are not expected to go beyond such taking of Form VII. There is no concept of accepting as many as Form VII are possible as adoption of such a course would obviously result in chaotic conditions.

III. சென்னை உயர்நீதிமன்ற மதுரை(கிளை)யின் தீர்ப்பாணை எண்.W.A,(MD)No515/2008, M.P.No.1/2008; நாள்:31.10.2008 ஐ எதிர்த்து தொடரப்பட்ட உச்சநீதிமன்ற வழக்கு Civil Appeal No.(s).5989-5991 of 2009 (S.David Stephen & others vs C.M.S.E.S.D. Memo.Hr.Sec. School Committee & others) தீர்ப்பாணை நாள்.20.3.2012ல் பத்தி 2, 3, மற்றும் 4-ல் பின்வருமாறு உள்ளது.

Para 2. ".....From 1999 onwards the dispute between the appellants and the respondent No. 1 pertaining to the election of the members of the society and of the committee of the respondent No. 1 society has been going on. The matter has been considered by the single Judge, Division Bench and Full Bench on different occasions. The present appeal arises from the order dated October 31, 2008 passed by the Madurai Bench, High Court of Madras.

Para 3. The Full Bench of the High Court in Writ Petition Nos. 2969 of 2001, 331 of 2002, 170 and 217 of 2004 C.M.S. Evangelical Suvi David Memorial Higher Secondars School Committee Karisal Vs. The District Registrar Cheranmahadevi, Tirunelveli District and Others, decided on March 23, 2005 [case reported in (2005) 2 M.L.J. 335) held as follows :

"...Validity of the election could very well be decided only by the competent Civil Court as the parties are entitled to let in their evidence to sustain their respective claims. In the event the Registrar satisfies himself as to the particulars furnished in Form VII as correct, he should enter the names in the register maintained for that purpose. In the event if he does not satisfy as to the particulars and thereby does not accept For VII, he has

to issue a direction relegating the parties to approach the civil Court for appropriate orders and thereafter shall act as per the orders of the civil Court.

Para 4. So far there has been no adjudication of the validity of the election of the members of the society of the committee which took place in 1999, 2006 and 2009 in the civil court although on more than one occasion the District Registrar has gone into the said question.

இத்தீர்ப்பாணையின் பத்தி 8ல் பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

Para 8

i. *The appellants may re-submit Form VII which was returned to them, to the District Registrar, Cheranmahadevi, Tirunelveli within two weeks from today.*

ii. *The District Registrar, Cheranmahadevi, Tirunelveli shall then hold an enquiry into the matter and satisfy himself as regards the particulars furnished in Form VII (on re-submission) by the appellants and form VII submitted on January 23, 2012 by the respondent No.1.*

iii. *After the completion of the enquiry, if the District Registrar accepts one of such Forms, the aggrieved party shall be at liberty to approach the civil Court for appropriate orders.*

iv. *In case the District Registrar is not satisfied with the particulars in Form VII submitted by the appellants as well as the respondent No.1 and does not accept any of these Forms, both the parties shall be at liberty to approach the civil court for redressal of their grievance.*

v. *The District Registrar shall abide by the decree/order that may be passed by the civil court in the matter.*

IV. மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பாணைகளின் அடிப்படையில், ஒரு சங்கத்தின் இரண்டு அணியினர் (Rival groups) தனித்தனியே சங்க நிர்வாகக் குழு தேர்தல்களை நடத்தி இரண்டு அணியினரும் தனித்தனியே நிர்வாகக் குழு படிவம் VII-ஐ தாக்கல் செய்தால், அப்படிவத்தில் இடம்பெற்றுள்ள விவரங்களின் மெய்த்தன்மை குறித்து (Correctness of the Form) உரிய

Verified by RealEstate ™

விசாரணை மேற்கொண்டு சரியான படிவத்தினை கோர்வைக்கு ஏற்க வேண்டும்; அல்லது இரண்டு படிவங்களும் முறையாக இல்லையெனில் இரண்டினையும் நிராகரித்து கட்சிகாரர்களை உரிய நீதிமன்றத்தில் தீர்வு காண அறிவுறுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது.

V. எனவே, போட்டி அணியினர்(Groups) வெவ்வேறு நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேடுந்தெடுத்தது குறித்து ஒன்றுக்கும் மேற்பட்ட படிவங்களை தாக்கல் செய்யும் நிகழ்வில் சங்கப்பதிவாளர்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

i. நிர்வாகக்குழு தேர்தல் தொடர்பாக படிவம் VII கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்டு பரிசீலனையில் இருக்கும் போதே மற்றொரு அணியினரால் தேர்தல் நடத்தப்பட்டதாக தெரிவித்து படிவம் VII தாக்கல் செய்யப்பட்டால், சங்கப்பதிவாளர் இரு அணியினரிடமும் விசாரணை மேற்கொண்டு, கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்ட இரண்டு படிவங்களில் எந்த படிவம் சட்டத் தேவைகளை பூர்த்தி செய்கிறது என்பது குறித்து உறுதி செய்து கொள்ள வேண்டும். விசாரணையின் முடிவில், சட்டத்தேவைகளை பூர்த்தி செய்யும் படிவம் VII ஐ கோர்வைக்கு ஏற்க வேண்டும். இதர படிவங்களை நிராகரிக்க வேண்டும். இவ்விசாரணையின் முடிவினை, பொருண்மைகளை விளக்கி ஆணை (Speaking Order) மூலம் தெரிவிக்க வேண்டும். சங்கப்பதிவாளரின் ஆணையினால் அதிருப்தியுறும் (aggrieved) குழுவினரை உரிய உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதன் மூலம் தீர்வு காண அறிவுறுத்த வேண்டும்.

ii. விசாரணையின் அடிப்படையில் கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்ட படிவங்கள் VII எதுவும் சட்டத்தேவையை பூர்த்தி செய்யவில்லை என சங்கப்பதிவாளர் மன நிறைவு அடைவாரேனால், கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்ட படிவங்கள் VII அனைத்தையும் நிராகரிக்கலாம். கட்சிகாரர்களிடம் உரிய உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதன் மூலம் தீர்வு காண அறிவுறுத்த வேண்டும்.

3. அவ்வாறு படிவம் VII கோர்வை குறித்து சங்கப்பதிவாளரால் மேற்கொள்ளப்படும் விசாரணையானது கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

Verified RedEstate TM

4. நீதிமன்றங்களில் சங்க நிர்வாகக்குழு தேர்தல் தொடர்புடைய படிவம் VII–ஐ கோர்வை செய்வதைத் தவிர பிற வழக்குகள் நிலுவையில் இருக்கும் நிலையில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் பிரிவு 16(3)(b) இன் கீழ் தாக்கல் செய்யவேண்டிய சட்டப்பூர்வ படிவங்கள்/பதிவுருக்கள் மற்றும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் பல்வேறு பிரிவுகள் மற்றும் அதன் விதிகளின் கீழ், மாவட்டப்பதிவாளரிடம் படிவங்கள்/பதிவுருக்கள் ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டால் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆண்றிக்கைகளை ஏற்பதற்கு நீதிமன்றத்தால் மாவட்டப்பதிவாளருக்கு தடை உத்தரவுகள்/இடைக்காலத் தடை உத்தரவுகள் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு மாவட்டப்பதிவாளர் மேற்கண்ட கோர்வைகளை ஏற்கலாம்.

5. சுற்றறிக்கை எண்.7/2011 நாள்.27.07.2011 (எண்.34579/I1/2011 நாள்.27.07.2011) மூலம் அறிவுறுத்தப்பட்ட கோர்வை தொடர்பான வழிகாட்டுதல்கள் இந்த சுற்றறிக்கை மூலம் மேலே சொல்லபட்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

6. இந்த சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பிட அனைத்து துணைபதிவுத்துறைத்தலைவர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/

ஒம்./27.05.2022
பதிவுத்துறைத்தலைவர்

// ஆணையின்படி //

31/5/2022

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்
(சீட்டு மற்றும் சங்கம்)

பெறுநர்

1. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்.

நகல்:

1. CS – பிரிவு
   பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
   (இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட)
2. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Verified RealEstate